பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விழயல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 22 புதன்கிழமை 05.02.2025 கதிர் 089

### இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தல் நாடாளுமன்றத் தேர்தல் இரண்டிலும் படுதோல்வியடைந்ததைத்தொடர்ந்து கட்சியை மறுசீரமைக்கும் பணியில் நாமல்ராஜபக்சகுதித்துள்ளார். ☞ 2

## அரச நிதி மோசடியாளர்கள் மீதான நடவடிக்கைகள் பழிவாங்கலல்ல

### விளக்கம் சொல்கிறார் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

அரச நிதியை மோசடி செய்தவர்களுக்கு எதிராகக் சட்ட நடவடிக்கை எடுக்கும்போது அதனை அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிட முடியாது. மக்களால் புறக்கணிக்கப்பட்ட தரப்பினர் ஆளும்தரப்புக்கு எதிராக கூட்டணியமைக்க முயற்சிக்கிறார்கள். மக்களாணையை மலினப்படுத்த போவதில்லை என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு செலவுத் திட்டத்தை தொடர்ந்து 'கிளீன் சிறி லங்கா' செயற்திட்டம் சகல அமைச்சுக்கள் ஊடாக அமுல்படுத்தப்படும். சுற்றுச்சூழலை தூய்மைப்படுத்தும் பணிக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஊழல் ஒழிப்பு என்பது கிளின் ஸ்ரீ லங்கா செயற்திட்டத்தின் ஒரு அங்கமாகும். கடந்த கால ஊழல் மோசடிகள் தொடர்பில் விசேட கவனம் ☞ 2

## மியன்மார் துணைத் பிரதமருடன் அமைச்சர் விஜித ஹேரத் பேச்சு

### இலங்கையர்களை மீட்பது குறித்து

இலங்கை பிரஜைகளை மீட்பது மற்றும் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது ☞ 2

## 'யுஎஸ் எய்ட்' திட்டங்கள் தொடர்பில் விரிவான விசாரணை வேண்டும்

'யுஎஸ் எய்ட்' இன் கீழ் இயங்கும் இந்தத் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து விசாரணை நடத்தி, நாடாளுமன்றத்தில் விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஆளும் தரப்பை நான் கேட்டுக் கொள்கிறேன் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.



அவர் இது தொடர்பில் தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது:

உலகளவில் பல திட்டங்களுக்கு ☞ 2

# வடக்கு, கிழக்கில் நேற்று கரிநாள் போராட்டங்கள்






இலங்கையில் 77ஆவது சுதந்திர தினம் வடக்கு, கிழக்கில் கரிநாளாக பிரகடனம் செய்யப்பட்டு நேற்று அனுஷ்டிக்கப்பட்டதோடு பெரும் கவனயீர்ப்புப் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை வழங்க வேண்டும் என்று போராட்டக்காரர்கள் வலியுறுத்தியதோடு, இனப்படுகொலைக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

போராட்டங்களில் பல்கலைக்கழக மாணவர்கள், மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள், பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

யாழ். பல்கலையில் மாணவர் போராட்டம் ☞ 2

## சிறிலங்காவிற்கு வழங்கப்பட்ட சுதந்திரம் தமிழரை ஒடுக்கக் கிடைத்த அனுமதியே

### யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அறிக்கை

சிறிலங்காவுக்கு வழங்கப்பட்ட சுதந்திரம் என்பது தமிழ் மக்களை ஒடுக்குவதற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமே ஆகும். பெறப்பட்ட சுதந்திரத்தின் இறைமை தமிழ் மக்களுடன் பகிரப்பட்டதாகக் கொள்ள முடியாது என்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பலரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சுதந்திர தினத்தினை கரி நாளாக அனுஷ்டித்து, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதோடு, பிரகடனமும் வாசிக்கப்பட்டது.

அந்த பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: ☞ 8



## அரிசி இறக்குமதியில் பெருமளவு மோசடி

### முன்னாள் விவசாய அமைச்சர் குற்றச்சாட்டு

ஆளும்தரப்புக்கும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் இடையில் இருந்து வரும் ஒப்பந்தம் காரணமாகவே ஆளும்தரப்பு நெல்லுக்கான உத்தரவாத விலையை இதுவரை தெரிவிக்காமல் இருக்கிறது. அதேநேரம் அரிசி இறக்குமதியின்போது பெரும் மோசடி இடம்பெற்றுள்ளது என முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி தட்டுப்பாட்டுக்கான பொறுப்பை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ரணில் ☞ 8

## வெளிநாட்டு தலைவர்கள் வாழ்த்து

இலங்கையின் 77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ உட்பட பல்வேறு இராஜதந்திரிகள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், பெப்ரவரி 4 ஆம் திகதி தங்கள் நாட்டின் சுதந்திரத்தைக் கொண்டாடும் இலங்கை மக்களுக்கு ☞ 8

## நெல் கொள்வனவுக்கான நிதி வழங்கப்பட்டுள்ளதாம்

பெரும் போகத்தில் நெல் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் தற்போது நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அதன்படி, நெல் சந்தைப்படுத்தல் சபை நெல் கொள்முதல் நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தனியார் தொலைக்காட்சியில் நடைபெற்ற நேர்காணல் நிகழ்ச்சியில் பங்கேற்றுப்பேசிய அமைச்சர் இதனை தெரிவித்தார். ☞ 8

### காலி முக்கொலைகள்:

## முன்னாள் அமைச்சரின் இணைப்பாளர் கைது

காலி, ஹினிதும, மகாபோதிவத்த பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் இடம்பெற்ற முக்கொலை சம்பவம் தொடர்பாக முன்னாள் அமைச்சரின் ஒருங்கிணைப்பு அதிகாரி ஒருவரை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடம் தற்போது ☞ 2

# விடத்தல் தீவில் கஞ்சா மீட்பு

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட விடத்தல் தீவு குளப் பகுதியில் பல இலட்சம் ரூபா பெறுமதியான ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகளை நேற்றுக் காலை அடம்பன் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மன்னார்- அடம்பன் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விடத்தல் தீவு குளப் பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸார் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் 13 பொதிகளை கொண்ட கேரள கஞ்சா பொதிகளை மீட்டனர்.

சுமார் 28 கிலோ எடை கொண்ட கேரள கஞ்சா பொதிகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. இதன் சந்தை பெறுமதி 42 இலட்சமென தெரிய வந்துள்ளது. எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## இனி இது .....

கட்சியின் தேசிய அமைப்பாளர் என்ற வகையிலும் ராஜபக்சக்களின் அடுத்த தலைமுறை அரசியல் வாரிசு என்கிற வகையிலும் இந்தப் பணியை அவர் சிரமேற்கொண்டு செய்யத் தொடங்கியுள்ளார்.

இதற்காக கிராமத்திற்குக் கிராமம் என்கிற பெயரில் ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளார். அநுராதபுரத்தில் அந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. கட்சி உறுப்பினர்களை மீண்டும் ஒருங்கிணைத்து அவர்களுக்கு உற்சாகமூட்டியதுடன் மக்களுக்கும் பாற்சோறு வழங்கினார் நாமல். இந்த நிகழ்வின்போது அவருக்கு மக்களிடம் இருந்து நல்ல வரவேற்புக் கிடைத்ததாகச் சொல்லப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் மக்களின் ஏதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத நிலையில் அவர்கள் மீண்டும் ராஜபக்சக்களை நோக்கித் திரும்பத் தொடங்கியதன் அறிகுறியா இது என்பது குறித்துப் பல தரப்பினரும் இதனைக் கூர்ந்து அவதானித்து வருகின்றனர்.

.............................................................

பரீட்சை வினாத்தாள் மோசடிகள் குறித்து தொடர்ந்து முறைப்பாடுகள் வந்துகொண்டே இருக்கின்றன. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாக்கள் கசிந்தது குறித்த வழக்கு உயர் நீதிமன்றம் வரையில் சென்றது. இப்போது அதையும் தாண்டி மாகாண மட்டங்களில் நடத்தப்படும் பரீட்சைகள் குறித்தும் பொலிஸார் நீதிமன்றங்களை நாடத் தொடங்கிவிட்டார்கள். துரதிர்ஸ்டவசமாக இத்தகைய மோசடிகள் மாட்டிக்கொள்பவர்கள் அதிபர்கள், ஜஎஸ்ஜ அதிகாரிகள் என்ற உயர் மட்டத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள்.

வடமத்திய மாகாணத்தில் நடந்த பரீட்சை மோசடி தொடர்பான விசாரணைகளின் தொடர்ச்சியாக பாடசாலை ஒன்றின் பதில் அதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளார். மாகாணக் கல்வி அமைச்சில் இருந்து பாடசாலைக்கு அனுப்பப்பட்ட அரக்கு முத்திரையிடப்பட்ட வினாத்தாள் பொதியிலிருந்து நுணுக்கமாக வினாத்தாளை உருவி அதனை மொபைல் போனில் படமெடுத்து தனியார் கல்வி நிலைய ஆசிரியர் ஒருவருக்கு அனுப்பி வைத்தார் என்று பதில் அதிபர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சந்தேகநபரான பதில் அதிபரை பெப்ரவரி 7 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான் ஏனைய சந்தேகநபர்களையும் உடனடியாகக் கைது செய்யுமாறு உத்திரவிட்டார்.

....................................

நாடாளுமன்றத்திற்கு உணவுப் பொருட்களை வாங்குவதற்காக செலுத்தப்பட்ட எண்பது மில்லியன் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள 122 வவுச்சர்கள் அவற்றை விநியோகிததவர்களுக்குத்தான் வழங்கப்பட்டனவா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை என்பதை கணக்காய்வாளர் நாயகம் அலுவலகம் கண்டுபிடித்துள்ளது. கொடுப்பனவைப் பெற்றுக்கொண்ட நபரிடம் இருந்து பணம் பெறப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல்கள் எவையும் பெறப்படவில்லை என்று கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. இது ஒரு விதி மீறல் என்றும் தேசிய தணிக்கை அலுவலகம் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது.

பணம் செலுத்தும்போது சரியான நபருக்கு நான் பணம் செலுத்தியுள்ளேன் என்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்தாலும், அத்தகைய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று அறிக்கை கூறுகிறது.

இந்த முறையில் 2023 ஜனவரி முதல் ஜூலை வரை 80 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான தொகை செலுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. பொதுவாக மாவட்டச் செயலகங்கள், அரச அலுவலகங்களில் நிகழ்வுகளுக்கு உணவுகள், சிற்றுண்டிகள், குளிர்பானங்களை வழங்குவதற்காக விநியோகத்தர் ஒருவரின் பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கும். அவர் அந்தப் பகுதி அமைச்சராகவோ அல்லது ஆளும்தரப்பு அரசியல்வாதியின் அண்ணன், தம்பியாகவோ, உறவினராகவோ அல்லது அவருக்கு நெருக்கமான கடைக்காரராகவோ இருப்பார். சாப்பாட்டுக் கடை ஒன்றில் உணவுகளைப் பெற்று அதற்கும் மேலாக நிறையக் கட்டணம், இலாபம் வைத்து அரச அலுவலகங்களுக்கு அவர் வழங்குவார். அதற்குரிய கொடுப்பனவு 'செக்' கடைக்காரரின் பெயரில் எழுதப்பட்டாலும் அது அரசியல்வாதிக்கு வேண்டப்பட்டவரின் கைகளிலேயே கொடுக்கப்படும் என்பதால் அந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டதற்கான சான்றுகள் ஆவணப்படுத்தப்படுவதில்லை. நாடாளுமன்றத்திலும் அதையேதான் செய்திருப்பார்களோ!

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## வடக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலில் யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான கொடி கம்பத்தில் பறந்த இலங்கைத் தேசியக் கொடி பல்கலைக்கழ மாணவர்களால் இறக்கப்பட்டு பின்னர் கறுப்புக் கொடியேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாணவர்களால் பல்கலைக்கழக வளாகத்தின் பல பாகங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்ட நிலையில் பிரதான வாயிலில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

முற்பகல் 11 மணியளவில் போராட்டத்தினை ஆரம்பித்த மாணவர்கள், இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்து, இலங்கையை குற்றவியல் கூண்டில் நிறுத்து, இறுதிப்போரில் இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் எங்கே, ஓலம் நிறைந்த தமிழர் வாழ்வுக்கு எப்போது விடிவு, உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியிருந்ததோடு கோசங்களையும் எழுப்பினார்கள்.

போராட்டத்தின் இறுதியில் 'எங்கள் தாய்நிலம் விடிவுறும் நாளே, தமிழர் எமக்கு சுதந்திர நாள்' என்ற தலைப்பிலான பிரகடனத்தையும் வெளியிட்டனர்.

### நல்லூரில் போராட்டம்

இதேவேளை, நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபிக்கு முன்பாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரையான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் கறுப்புக்கொடி ஏந்திய எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் சிவகுரு ஆதீனத்தில் ஆதீன குரு முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் உள்ளிட்ட இளையோர் சிலர் பங்கேற்றிருந்தனர்.

### கிளிநொச்சியில் நீதி கோரிய போராட்டம்

வழிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றலில் ஆரம்பமாகிய போராட்டம் கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை சென்றது.

இந்தப் போராட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின், நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார், சிறிதரன், முன்னாள், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், காணி உரிமைக்கான மக்கள் இயக்கத் தலைவர் முரளிதரன் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

போராட்டத்தின்போது வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்குஎன்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தவேண்டும், இலங்கையை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தவேண்டும், ஆக்கிரமிப்புக்கள் நிறுத்தப்படவேண்டும், சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது? உட்பட பல கோசங்களை எழுப்பினர்.

### மட்டக்களப்பு - செங்கலடியில் போராட்டம்

கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் மட்டக்களப்பு - செங்கலடி பகுதியில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது. செங்கலடி சித்தி விநாயகர் ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பமான பேரணி கொம்மாதுறை பிள்ளையார் ஆலய முன்றலைச் சென்றடைந்து, அங்கு போராட்டம் தொடர்ந்தது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தினர், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்களென பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

அவர்கள், 'இலங்கையின் சுதந்திர தினம் எங்களுக்கு கரிநாள்', 'நீங்கள் சுதந்திரம் அனுபவிக்கும்போது நாங்கள் ஒடுக்கப்படுவதா', 'உங்களுக்கு சுதந்திர நாள் எங்களுக்கு திண்டாட்ட நாள்', 'காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே?', 'எமது மேய்ச்சல் தரை எமக்கு வேண்டும்', 'நிம்மதியில்லாத நாட்டில் சுதந்திரம் எதற்கு?', 'சுதந்திரம் இல்லாத நாட்டில் சுதந்திர தினம் எதற்கு?', 'எங்கே எங்கே உறவுகள் எங்கே?' போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு ஈடுபட்டனர்.

இலங்கையின் தேசிய சுதந்திர தினத்தினை வட,கிழக்கு தமிழர்கள் கரிநாளாக அனுஷ்டிக்கும் வகையில் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் மட்டக்களப்பு நகரில் முன்னதாக போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதும் மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்தினால் நீதிமன்றத்தின் ஊடாக தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த போராட்டம் செங்கலடியில் முன்னெடுக்கப்பட்டதோடு, போராட்டத்தின் இறுதியில் சர்வதேச சமூகத்துக்கு அனுப்புவதற்கான மனு ஒன்றும் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி செல்வராணியினால் வாசிக்கப்பட்டது.

## யுஎஸ் எய்ட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதியளித்த 'யுஎஸ் எய்ட்' தற்போது சர்ச்சையின் மையத்தில் உள்ளது, அமெரிக்கர்களின் நிதியை மனிதாபிமான உதவி என்ற பெயரில் மற்ற நாடுகளில் குழப்பத்தையும் உறுதிப்பாடின்மையையும் ஏற்படுத்த பயன்படுத்தியதாக மேற்கத்திய ஊடகங்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

இலங்கை மட்டும் சமீபத்திய ஆண்டுகளில் 'யுஎஸ் எய்ட்' இடமிருந்து மில்லியன் கணக்கான டொலர் நிதி மற்றும் மானியங்களைப் பெற்றது. 100க்கும் மேற்பட்ட அரசு சாரா நிறுவனங்கள் இந்த நிதியை நேரடியாகப் பெற்றன, அதே நேரத்தில் அரசியல்வாதிகள், ஊடகப் பிரமுகர்கள் அனைவரும் 'யுஎஸ் எய்ட்'டிலிருந்து பயனடைந்தனர்.

அவர்கள் தங்கள் மானியங்கள் மற்றும் உதவி மூலம் பல துறைகளில் பன்முகப்படுத்தப்பட்டனர், ஆனால் இந்த நிதி எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பது குறித்த தெளிவான கணக்குகள் எதுவும் இல்லை. 'யுஎஸ் எய்ட்' இன் கீழ் இயங்கும் இந்தத் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து விசாரணை நடத்தி, நாடாளுமன்றத்தில் விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஆளும்தரப்பை நான் கேட்டுக்கொள்கிறேன். இவற்றிலிருந்து பயனடைந்த இந்த அரசு சாரா நிறுவனங்கள் பற்றிய விரிவான கணக்கும் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

அரசு சாரா நிறுவனங்களுக்கு நிதியளிப்பதற்கான விதிமுறைகள் பல ஆண்டுகளாக அறிக்கைகளில் உள்ளன, ஆனால் அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. வெளிப்படைத் தன்மையைப் பராமரிக்க இந்த விதிமுறைகளைக் கொண்டுவருமாறு ஆளும்தரப்பைக் கேட்டுக்கொள்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## அரச நிதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தப்பட்டுள்ளது. அரச நிதியை மோசடி செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்போது அதனை அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிட முடியாது.

சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது ஊழல்வாதிகள் அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிட்டுக் கொண்டு தங்களை பாதுகாத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். எவரையும் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்த வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு கிடையாது. ஊழல்வாதிகளை மக்கள் அறிவார்கள். அவர்களின் ஊழல் மோசடிகளையும் அறிவார்கள்.

சட்டம் அனைவருக்கும் பொதுவானதாகவும். கடந்த அரசாங்கங்களைப் போன்று சட்டத்தை தமது விருப்பத்துக்கு ஏற்ப பயன்படுத்த போவதில்லை. ஊழல்வாதிகளுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தலில் மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக ஒன்றிணைந்து கூட்டணியமைக்க முயற்சிக்கிறார்கள். தேசிய மக்கள் சக்திக்கு கிடைக்கப் பெற்றுள்ள ஆணையை மலினப்படுத்த இடமளிக்க போவதில்லை என்றார்.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலிஹினிதுமமஹாபோதிவத்தபகுதியில் கடந்த 30 ஆம் திகதி இரவு 11.15 மணியளவில் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரியால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் கொல்லப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேரில் ஒருவர் ரி-56 துப்பாக்கியால் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றதாக பொலிசார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு நடந்த நேரத்தில் ஐந்து பேர் விடுதியில் மது அருந்திக் கொண்டிருந்தனர், அவர்களில் மூன்று பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

துப்பாக்கிச் சூடு நடந்த நேரத்தில் மற்ற இருவரும் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த துப்பாக்கிச் சூட்டில் விடுதியின் உரிமையாளரான இந்துனில் சமன் குமார (வயது 55) மற்றும் அம்பலாங்கொடையைச் சேர்ந்த எம். நெவில் மற்றும் ஹினிதும பகுதியைச் சேர்ந்த 34 வயதான சத்துரங்க குமார என்ற மூன்று நபர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

கொலைசெய்யப்பட்ட மூன்று நபர்களுக்கும் பாதாள உலகத்துடன் எந்த தொடர்பும் இல்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மியன்மார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான முக்கிய பிரச்சினைகளை நிவர்த்தி செய்வது குறித்து வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் மியான்மர் துணைப் பிரதமர் உ தான் ஸ்வேவுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

மியன்மாரிலுள்ள இணையதள மோசடி மையங்களில் சிக்கியுள்ள 18 இலங்கை பிரஜைகளை விரைவாக மீட்டு பாதுகாப்பாக திருப்பி அனுப்புவதற்கு மியான்மர் அரசாங்கத்தின் அவசர உதவியை அமைச்சர் இதன் போது கோரியுள்ளார்.

2022 மற்றும் 2024 க்கு இடையில், மியான்மார் 91 இலங்கையர்களை மீட்டு திருப்பி அனுப்ப உதவியது. மியாவாடியில் கடத்தல் கும்பல்களால் சித்திரவதை மற்றும் துஷ்பிரயோகத்தை எதிர்கொண்டதாகக் கூறப்படும் மீதமுள்ள 18 இலங்கையர்களை உடனடியாக மீட்டு திருப்பி அனுப்புவதற்கு மியான்மரின் அவசர ஒத்துழைப்பை அமைச்சர் விஜித ஹேரத் வலியுறுத்தியுள்ளார்.

75 ஆண்டுகளுக்கும் மேலான இராஜதந்திர ரீதியில் வேரூன்றிய இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கும், தேரவாத பௌத்த பாரம்பரியத்தால் ஆதரிக்கப்படும் வலுவான மக்கள் - மக்கள் தொடர்புகளுக்கும் இரு அமைச்சர்களும் உறுதியளித்துள்ளனர்.

## வெளிநாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கா சார்பாக நான் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து 77 ஆண்டுகளில், மக்கள் உறவுகள் மற்றும் பகிரப்பட்ட

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# பனையை மாபெரும் பணப் பயிராக மாற்ற முயற்சி; ஒரு பனை மூலம் வருடம் 10 லட்சம் ரூபா வருமானம்

## நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்கிறார் சபைத் தலைவர்

(சுபேசன்)

பனம் பயிரை மாபெரும் பணப் பயிராக மாற்ற பெரு முயற்சி எடுத்து வருவதாகவும் - அதனூடாக ஒரு பனையில் இருந்து வருடம் ஒன்றிற்கு பத்து லட்சம் ரூபா வருமானத்தை ஈட்ட முடியும் எனவும் பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை பூநகரி-பரமன்கிராய் பகுதிக்கு பனைசார் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நிலையம் அமைக்கும் நோக்கில் கள விஜயம் மேற்கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

பூநகரியைச் சேர்ந்த சதீஸ்குமார் என்பவர் தனது காணியில் உள்ள சுமார் ஆயிரம் பனை மரங்களை பனை அபிவிருத்திச் சபையோடு இணைந்து பொருளாதார பயிராக மாற்ற முன்வந்துள்ளார்.

நாம் இந்த இடத்தில் பனை சார் உற்பத்தி ஸ்தானம் ஒன்றை அமைத்து பதனீர் உள்ளிட்ட பனை சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டுள்ளோம்.

பனந் தோப்பு பராமரிப்பு தொடர்பில் சட்ட திட்டங்கள் உள்ளன.நாம் அதனை நிறைவேற்றும் போது மக்கள் எம்மோடு முரண்படும் நிலை



உள்ளது.எமது பனை நாம் தறிக்கிறோம் ஏன் அனுமதி என்ற நிலையே உள்ளது.

ஆனால் ஒரு வருடத்தில் இந்த நிலைமை மாறும். பனை மரத்தை தேவையின்றி அழிக்கமாட்டார்கள். தாமாக முன்வந்து பாதுகாக்கும் நிலை ஏற்படும்.

தற்போது பனை ஒன்றின் ஊடாக வருடம் ஒன்றிற்கு அதிகபட்ச வருமானமாக இரண்டு லட்சம் ரூபா பெறமுடியும்.

இதுவே நாம் பனம் உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் போது வருடம் ஒன்றிற்கு பத்து லட்சம் ரூபா வரை ஈட்ட முடியும்.

பனம் பயிரை மாபெரும் பணப் பயிராக மாற்றுவோம். அதன் பின்னர் வடலிகளை அழிக்கும் செயற்பாடு தானாக நிறுத்தப்படும்.

பனை ஊடாக கிடைக்கும் வருமானத்தை நெல்லில் இருந்தோ-ஏனைய பயிர்களில் இருந்தோ



பெற முடியாது.தென்னை போன்ற பயிர்களை உருவாக்க சிரமப்பட வேண்டும்.ஆனால் பனை தானாக வளரக்கூடியது. ஒரு பனை மரத்திற்கு 100சதுர அடி நிலம் போதுமானது.

பனையில் இருந்து மாப் பொருள்கள், பழச்சாறு, குடிபானம் உள்ளிட்ட ஏராளம் உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய முடியும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# ஐஸ் போதைப் பொருளுடன் 37 வயது சந்தேகநபர் கைது

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மட்டக்களப்புத் தரவை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறைசுற்றுச்சூழல்பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை தொடர்ந்து மேற்குறித்த வீடு ஒன்றில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.இதன் போது 37 வயதுடைய சந்தேக நபர் உட்பட மறைத்து வைக்கப்பட்ட 770 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

மேலும் சந்தேக நபர் உட்பட சான்றுப் பொருள்கள் யாவும் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் .

குறித்த சோதனை நடவடிக்கை கல்முனை பிராந்தியத்திற்கான உதவி பொலிஸ் அத்தியட்ச ர் உதுமாலெவ்வை மஹ்மூத்கான் இப்னு அசாரின் வழிகாட்டலுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் ஆலோசனைக்கமைய பொலிஸ் சுற்றுச்சூழல் பிரிவு பொறுப்பதிகாரி ஏ. நஸார் தலைமையிலான பொலிஸ் குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தவசிகுளம் விளையாட்டு மைதானத்தில் வைத்து இளைஞர் மீது கோரத்தாக்குதல்

வவுனியா, தவசிகுளம் பகுதியில் விளையாட்டு மைதானத்தில் வைத்துஇளைஞர்ஒருவர்மீதுதாக்குதல்மேற்கொள்ளப்பட்டமையால் அவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தவசிகுளம் பகுதியில் இரண்டு அணிக்களுக்கிடையில் கிரிக்கெட் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதன் போது குறித்த மைத்தானத்திற்குள் வந்த சிலர் விளையாட்டில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியதுடன், விளையாட்டு நிகழ்வுக்கு வழங்கப்படவிருந்த வெற்றிக் கிண்ணங்கள் மற்றும் கதிரைகளையும் உடைத்துள்ளனர்.

காயமடைந்த இளைஞர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், அங்கு பெறப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் இடம்பெற்று வருவதாக வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். 100

# முன்பள்ளிக் கல்வியில் முறையான மாற்றம் அவசியம்; குறித்த பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பேன்

## நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவிப்பு

(சுபேசன்)

முன்பள்ளிக்கல்வியில்ஒழுங்கான கட்டமைப்புக்களை உருவாக்கி அதனூடாக கல்வி மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் துறை சார்ந்தவர்களின் ஒத்துழைப்போடு நாடாளுமன்றில் பிரேரணையை சமர்ப்பிப்பேன் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.



கடந்த சனிக்கிழமை இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

முன்பள்ளிப் பருவம் தற்போது ஓரளவு முன்னேற்றம் கண்டிருப்பதுடன் - பாதுகாக்கப்படுகிறது.

முன்பள்ளிப் பருவத்தில் குழந்தைகளுக்கு சகல பழக்கவழக்கங்களும் பழக்கப்பட வேண்டும்.

கழிவு முகாமைத்துவம் தொடர்பாக போதிப்பது மிக அவசியமானது.

சுகாதாரம் தொடர்பில் பெற்றோர் களுக்கும் விழிப்புணர்வு அவசியம்.

பல சந்தர்ப்பங்களில் முன்பள்ளிச் சிறார்களுக்கு பைக்கற் உணவுகளை இடைவேளை உணவாக வழங்கி அனுப்புகின்றனர்.

ஆனால் இப்போது முன்பள்ளி ஆசிரியர்களுக்கு குழந்தைகளின் உணவு விடயத்தில் போதிய அறிவு உள்ளது.

பெற்றோர்களுக்கு அது தொடர்பாக அறிவூட்ட வேண்டும்.

அத்தோடு படித்தவர்கள் கூட பொது மலசலகூடங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்என்று தெரியாமல்உள்ளனர்.மேலும் சிலவாகனதரிப்பிடங்களில்10வாகனங்களை விடக்கூடிய வசதி இருந்தும் சிலரது தவறால் 5 வாகனங்களையேதரித்துவிடக்கூடியநிலைமை காணப்படுகிறது.இந்த பழக்கவழக்கங்கள் அனைத்துமே முன்பள்ளிப் பராயத்தில் இருந்தே கற்பிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக முன்பள்ளிகள் எழுத்துக் கற்றுக் கொடுப்பதற்கு மேலாக நல்ல பழக்கவழக்கங்களை அந்தப் பராயத்தில் கற்றுக்கொடுக்க வேண்டும்.

நாட்டில் இடம்பெற்ற நீண்டகால யுத்தத்தால் சமுகக் கட்டமைப்பு உடைக்கப்பட்டுள்ளது. யுத்தம் காரணமாக சமுகக் கட்டமைப்பு உடைக்கப்பட்டதால் இன்று அயலவர்கள் யார் என்று தெரியாத நிலைமை.ஆனால் முன்னைய காலத்தில் ஒரு கிராமம் என்றால் அனைவருமே அறிமுகமானவர்களாகவும் - உறவினர்களாகவும் - இருப்பார்கள்.

இன்று இந்த சமுகக் கட்டமைப்பு உடைக்கப்பட்டதன் விளைவே பிறழ்வான நடத்தைகளில் இளைய சமுதாயம் ஈடுபட காரணமாக அமைந்துள்ளது.

எனவே முன்பள்ளியில் போதிக்கப்படும் சிறந்த பழக்கவழக்கங்களே சிறந்த எதிர்கால சந்ததியினரை உருவாக்கும். - என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஈ- சிகரெட்டுக்களும் ஆபத்துத்தான்

இலங்கையைச் சேர்ந்த 32 வயதுடைய தொழிலதிபர் ஒருவர் நேற்றுக் காலை வானூர்தி நிலையக் காவல்துறை போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். மின் சிகரெட் (ஈ – சிகரெட்டுக்கள்) பெட்டிகள் 262ஐ இலங்கைக்குள் கடத்திவர முயன்றார் என்ற குற்றச்சாட்டின் கீழ் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். பறிமுதல் செய்யப்பட்ட பொருளகளின் மதிப்பு ரூ. 39.3 மில்லியன்.

இந்த சிகரெட்டுக்களை பண்டாரநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்திலிருந்து (BIA) வெளியே கொண்டு செல்ல முயன்றபோது இந்த கைது நடந்தது. தெமடகொடவைச் சேர்ந்த தொழிலதிபரான பெண் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார், அதிகாலை 2.35 மணிக்கு கோலாலம்பூரிலிருந்து மலேசியா ஏர்லைன்ஸ் வானூர்தியில் அவர் வந்திருந்தார்.

ஈ – –சிகரெட்டுகள் அல்லது வேப் சிகரெட்டுகள் சில காலமாகவே இலங்கையில் பயன்பாட்டில் வருகின்றன, இன்று இளைஞர்கள் மத்தியில் இதன் பயன்பாடு வளர்ந்து வருகின்றது. இது ஒரு 'ஃபேஷனாக' மாறிவிட்டது, நவீன தலைமுறையினர் சிகரெட்டுக்கள் அழுக்கானவை என்றும் அவற்றுக்கு இவை மாற்று என்றும் கருதுகின்றனர்.

உலக சுகாதார அமைப்பின் (WHO) கூற்றுப்படி, பல வகையான மின்–சிகரெட்டுகள் உள்ளன, அவை மிகவும் பொதுவான வகை மின்னணு நிக்கோடின் விநியோக அமைப்பு (ENDS) மற்றும் மின்னணு நிக்கோடின் அல்லாத விநியோக அமைப்பு (ENNDS). இந்த அமைப்புகள் ஒரு திரவத்தை வெப்பமாக்கி பயனரால் உள்ளிழுக்கப்படும் ஏரோசோல்களை உருவாக்குகின்றன. இந்த மின்–திரவங்கள் என்று அழைக்கப்படுபவை நிக்கோடினைக் கொண்டிருக்கலாம் அல்லது கொண்டிருக்காமலும் இருக்கலாம் (ஆனால் புகையிலையைக் கொண்டிருக்கவில்லை).

எப்படியிருந்தாலும் இந்த ஈ– சிகரெட்டுக்களும் பொதுவாக மக்களின் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் சேர்க்கைகள், சுவைகள் மற்றும் ரசாயனங்களையே கொண்டிருக்கின்றன. இதிலும் பல்வேறு அளவு நிக்கோடின் மற்றும் தீங்கு விளைவிக்கும் உமிழ்வுகள் உள்ளன. மின்–சிகரெட் உமிழ்வுகளில் பொதுவாக நிக்கோடின் மற்றும் பிற நச்சுப் பொருட்கள் உள்ளன, அவை பயனர்கள் மற்றும் ஏரோசோல்களைப் பயன்படுத்தப்படாதவர்கள் இருவருக்கும் தீங்கு விளைவிக்கும். நிக்கோடின் இல்லாத (ENNDS) என்று கூறும் சில தயாரிப்புகளில் நிக்கோடின் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

வட கரோலினா பல்கலைக்கழகம் நடத்திய 2018ஆம் ஆண்டு ஆய்வில், மின்–சிகரெட்டுகளில் காணப்படும் இரண்டு முதன்மைப் பொருட்கள் – புரோப்பிலீன் கிளைக்கால் மற்றும் காய்கறி கிளிசரின் – செல்களுக்கு நச்சுத்தன்மை வாய்ந்தவை என்றும், மின்–திரவத்தில் அதிக பொருட்கள் இருந்தால், நச்சுத்தன்மை அதிகமாகும் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. அவர்களின் கூற்றுப்படி, மின்–சிகரெட்டுகள் அசிடால்டிஹைடு, அக்ரோலின் மற்றும் ஃபார்மால்டிஹைடு உள்ளிட்ட பல ஆபத்தான இரசாயனங்களை உருவாக்குகின்றன. ஆல்டிஹைடுகள் நுரையீரல் நோய் மற்றும் இருதய (இதய) நோய்களை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மின்–சிகரெட்டுகளில் களைகளைக் கொல்ல முதன்மையாகப் பயன்படுத்தப்படும் அக்ரோலின் என்ற களைக்கொல்லியும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது கடுமையான நுரையீரல் காயம் மற்றும் நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் (COPD) ஆகியவற்றை ஏற்படுத்தும் மற்றும் ஆஸ்துமா மற்றும் நுரையீரல் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடும்.

இலங்கை மருத்துவ சங்கம் மே 2024 தனது வெளியீட்டில் மின்–சிகரெட்டுகளை 'ஆடுகளின் உடையில் ஒநாய்' என்று அழைத்தது, இன்று வேப்ஸ் மற்றும் மின்–சிகரெட்டுகள் முற்றிலும் பாதுகாப்பானவை என்பது ஒரு பிரபலமான தவறான கருத்தாக மாறிவிட்டது, ஆனால் உண்மை மிகவும் சிக்கலானது. 'பாரம்பரிய புகைபிடிப்பதைவிட வேப்பிங் குறைவான ஆபத்தானது என்று ஆய்வுகள் காட்டினாலும், இதில் ஆபத்துகள் இல்லாமல் இல்லை. மின்–சிகரெட்டுகள் மற்றும் வேப்களில் புகையிலை மற்றும் அதன் எரியக்கூடிய பொருட்கள் இல்லை, அவை வழக்கமான சிகரெட்டுகளில் புற்றுநோயை உண்டாக்கும் முக்கிய பொருட்கள். இருப்பினும், அவற்றில் இன்னும் நிக்கோடின் மற்றும் பிற பொருட்கள் உள்ளன, அவை போதைப்பொருளை ஏற்படுத்துகின்றன மற்றும் பயனர்களை பிற ஆபத்தான மருந்துகளுக்கு ஆளாக்கக்கூடும். இலங்கை உட்பட பெரும்பாலான ஆசிய நாடுகளில் இந்த சாதனங்களைக் கண்காணிக்க அல்லது நிர்வகிக்க கடுமையான விதிமுறைகள் இல்லை, இதனால் இலங்கையில் இதன் பயன்பாடு வேகமாக அதிகரித்து வருகின்றது. அவை பெரும்பாலும் பேஸ்புக், வாட்ஸ்அப், டெலிகிராம், வைபர் மற்றும் எஸ்எம்எஸ் போன்ற பிரபலமான சமூக ஊடக தளங்கள் மூலம் இளைஞர்கள் மற்றும் பெண்களிடம் பிரபலப்படுத்தப்படுகின்றன.

பெற்றோர்கள், பொது அதிகாரிகள் மற்றும் நவீன 'செல்வாக்கு செலுத்தும்' சமூகத்தினரிடையே புரிதல் மற்றும் விழிப்புணர்வு இல்லாததால் இளம் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் இந்த சாதனங்களுக்கு அடிமையாகி வருகின்றனர் என்பது தெளிவாகிறது. எனவே, அத்தகைய சாதனங்களின் தீய விளைவுகளைச் சுட்டிக்காட்டி, அதன் இறக்குமதி, சந்தைப்படுத்தல், விநியோகம் மற்றும் விற்பனையை நிர்வகிக்கும் ஒழுங்குமுறை கட்டமைப்பைப் புதுப்பிப்பது குறித்து ஆளும்தரப்பு சிந்திக்கவேண்டும்.

# சுதந்திரதின நிகழ்வில் தேசிய கீதத்திற்கு மதகுருமார் மரியாதை தேவையில்லையா?

## வவுனியாவில் எழுந்த கேள்வி

வவுனியாவில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வில் தேசிய கொடி ஏற்றப்படும் போதும், தேசியகீதம் இசைக்கப்படும் போது மதகுருமார் எழுந்து மரியாதை செலுத்தாத சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதனால் மதகுருமார் என்றால் தேசிய கீதத்திற்கு மரியாதை செலுத்தத் தேவையில்லையா என்கிற கேள்வி எழுந்துள்ளது.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கா பதவியேற்பு நிகழ்வில் தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது பௌத்த மதகுரு உட்பட அனைத்து மதகுருமாரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தியிருந்தனர். அந்த முன்னுதாரணமான செயற்பாட்டை நாட்டு மக்கள் வரவேற்றிருந்தனர்.

இந்நிலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்ட பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மதகுருமார் தேசிய கொடி ஏற்றும் போதும், தேசிய கீதம் இசைக்கும் போதும் எழுந்து மரியாதை செலுத்தவில்லை.

தமது இடத்திலேயே அமர்ந்திருந்து அதனை பார்வையிட்டுக் கொண்டிந்தனர். தாய் நாட்டை விட மத தலைவர்கள் என்ற நிலை பெரியவர்களா என அதனை பார்வையிட்ட பலரும் கேள்வி எழுப்பியிருந்தனர். 100



# முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் சுதந்திர தினம்

(ஸாகிர்)

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 77 ஆவது தேசிய சுதந்திர தின விழாவை ஒட்டியதான இஸ்லாமிய சமய நிகழ்வுகள் நேற்று காலை 6 மணி முதல் கொழும்பு 6, வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலில் வெகு சிறப்பாக நடைபெற்றன.

'தேசியமறுமலர்ச்சிக்காய்ஒன்றிணைவோம்' என்ற மகுடம் தாங்கி இம்முறை தேசிய சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது.

அந்தவகையில், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், இலங்கை நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் வைத்தியர் ரிஸ்வி ஸாலி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அர்க்கம் நூரமித் முஸ்லிம் சமய வாழ்த்துரையை வழங்கினார். ஜம்இய்யாவின் பிரதிநிதிகளாக ஆலிம்கள் பலரும் வருகை தந்திருந்தனர்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் வரவேற்புரை நிகழ்த்தியதோடு, உதவிப் பணிப்பாளர்களான என்.நிலோபர் மற்றும் எம்.எஸ். அலா அஹமத் மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் முப்தி முர்சி, வக்ஃப் நியாய சபை பதில் செயலாளர் எம்.என்.எம். ரோஸன் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கிராஅத் வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசல் பேஸ்இமாம் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். சியாம் (ரஷாதி) வழங்கியதோடு,

வரவேற்புரையை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ், விசேட துஆப்பிரார்த்தனையை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அர்க்கம் நூரமித் மற்றும் இலங்கை நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் வைத்தியர் ரிஸ்வி ஸாலி தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் ஆகியோர் உரையாற்றியதோடு, வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசல் உதவிச் செயலாளர் அல்ஹாஜ் எம்.எம். இர்பான் நன்றியுரை நிகழ்த்தினார்.

வெள்ளத்தை ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் அல்ஹாஜ் முஹம்மத் ரிஸ்வி உட்பட நிர்வாக சபை உறுப்பினர்கள், ஏனைய பள்ளிவாசல்களைச் சேர்ந்தநிர்வாகசபைபிரதிநிதிகள்என்போரும் வந்திருந்தனர்.

ஆலிம்கள், அரசியல் தலைவர்கள், அதிதிகள் மற்றும் அதிகாரிகள் எனப் பலரும் இந்நிகழ்வில் பிரசன்னமாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல், பல்வேறு ஊடக நிறுவனங்களையும் சேர்ந்த ஊடகவிய லாளர்கள் வருகை புரிந்து தம் பணிகளை செவ்வனே நிறைவேற்றினர்.

ஊடகப் பயிற்றுவிப்பாளரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான இஸ்பஹான் சாப்தீன் இந்நிகழ்வை தொகுத்து வழங்கினார்.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு கற்றல் உபரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன!

(றிபாஸ்)

சம்மாந்துறைகல்விவலயத்துக் குட்பட்ட அல் ஹிக்மா முஸ்லிம் வித்தியாலயத்தில் அதிபர் எம். ரீ.அப்துல் சத்தார் தலைமையில் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வுக்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப்பணிப்பாளர்சட்டத்தரணி சீ. எம்.ஹலீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் சுதந்திர தினத்தை முன்னிட்டு தரம் ஒன்று மாணவர்களுக்கு பிரதம அதிதியால் புத்தகப் பைகளும், கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலை மேம்பாட்டு இணைப் பாளர் ஏ. எச். எம். சவாகிர், அல் கரீம் பவுண்டேஷன் செயலாளர் யூ. எல். எம். பாயீஸ் மற்றும் அகில இலங்கை இளஞ்ர் பேரவையின் தலைவர் றுமைஸ் முஹம் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.







# சமுதாயப் பொலிஸ் குழு ஏற்பாட்டில் வவுனியாவில் மரநடுகை நிகழ்வு

வவுனியா சமுதாய பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் மர நடுகை நேற்று இடம்பெற்றது.

வவுனியாவின் முன்னணி தேசியப் பாடசாலையான வவுனியா மகாவித்தியாலயத்தின்மைதானத்தின் எல்லையோரங்களில் சுதந்திர தினத்தை முன்னிட்டு பயன்தரு மற்றும் நிழல் தரு மரங்கள் நாட்டி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில்வவுனியாதலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அதிபர் ஆலோகேஸ்வரன், சமுதாய பொலிஸ் குழு பொறுப்பதிகாரி ஹேரத், பிரதி அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள், ஆசிரியர்கள், சமுதாய பொலிஸ் குழு உறுப்பினர்கள், சாரணர் குழுக்கள், மாணவர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டு மரங்களை நாட்டி வைத்தனர்.





முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 77ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்

(நூருல் ஹுதா உமர்)

’தேசிய மறுமலர்ச்சிக்காக அணிதிரள்வோம்’ என்ற கருப்பொருளின் கீழ் நாட்டின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நாடுமுழுவதும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், நேற்று (செவ்வாய்க்கிழமை) இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி ஏ.எம்.எம், முஸ்தபா, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட பீடாதிபதி அஷ்ஷெய்க் எம்.எச்.ஏ. முனாஸ், மற்றும் மாணவர்கள் நலன்புரி சேவைகள் நிறுவனத்தின் பணிப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஏ.எல்.எம். ஐயூப்கான், பல்கலைக்கழக வேலை பகுதியின் பொறியலாளர் எம்.எஸ்.எம். பஸில், பிரதம பாதுகாப்பு அதிகாரி ஏ.எம்.ஜாபிர், சட்டம் மற்றும் ஆவணங்கள் பிரிவின் சிரேஷ்ட உதவி பதிவாளர் ஏ.ஆர்.எம். சுல்பி, விரிவுரையாளர்கள், நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வின்போது மர நடுகையும் இடம்பெற்ற அதேவேளை பல்கலைக்கழக பாதுகாப்பு தரப்பினரின் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது.





# திருகோணமலை மாவட்ட செயலகத்தில் 77ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வு

(அபு அலா, முபீன்)

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 77 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அக்மீமன கமகே ரொஷான் பிரியசஞ்சனவால் தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் நாட்டுக்காக தம்மை அர்ப்பணித்த முப்படை வீரர்களை நினைவு கூரும் வகையில் இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

’தேசிய மறுமலர்ச்சிக்கு தயாராகுவோம்’ என்ற தொனிப்பொருளின் கீழ் இம்முறை சுதந்திர தினம் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் மாவட்ட செயலக வளாகத்தில் மர நடுகை நிகழ்வும் இதன்போது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வ மத தலைவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற, இந்த நிகழ்வில், இலங்கையின் பாரம்பரியத்தை பறைசாற்றும் பல்லின கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. கலை கலாசார நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக ஊழியர்களும் கலந்து கொண்டனர்.










# நுவரெலியா மாவட்டத்தில் இலவச மருத்துவ முகாம்

(கேதீஸ்)

டீ பீல்ட் மற்றும் சயில்ட்பண்ட் அனுசரணையில் நுவரெலியா மாவட்ட செயலகம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அமைப்பினரின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாமொன்று நுவரெலியாவில் நடைப்பெற்றது.

இந்த மருத்துவ முகாமில் நுவரெலியா, தலவாக்கலை, கொத்மலை, நவதிஸ்பணை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளை சேர்ந்த 250 இற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மருத்துவ முகாமில் நுவரெலியா பொது வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள் மற்றும் விசேட வைத்திய நிபுணர்கள் ஊடாக வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.





# போதை மாத்திரையுடன் வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா - பெரியார்குளம் பகுதியில் போதை மாத்திரையுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து அதன் பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையிலான பொலிஸ் குழுவினர் வவுனியா, பெரியார்குளம் பகுதியில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது 50 போதை மாத்திரைகள் இளைஞர் ஒருவரிடம் இருந்து மீட்கப்பட்டன.

இதனையடுத்து குறித்த மாத்திரைகள் மீட்கப்பட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த இளைஞரும் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் வவுனியா பெரியார்குளம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய நபராவார்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இளைஞரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். 100



காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை மாநகரில் இடம்பெற்ற 77ஆவது சுதந்திர தின நிகழ்வு

(அப்ராஸ், காலித்தீன், நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர சபை ஒழுங்கு செய்திருந்த 77ஆவது தேசிய சுதந்திர தின விழா நேற்று (சனிக்கிழமை) கல்முனை வாசலில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.ரி.எம்.ராபி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அரசியல் பேரவை உறுப்பினரும் திகாமடுல்ல மாவட்ட பிரதேச அபிவிருத்தி குழுக்களின் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா பிரதம அதிதியாக கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றிவைத்தார்.

இதன் போது கல்முனை பிரதேச செயலாளர் ரி.எம். எம்.அன்சார், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.எம்.ஆசிக், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரம்சீன் பக்கீர், அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் மாநகர சபையின் பிரதி ஆணையாளருமான ஏ.எஸ்.எம்.அஸீம், கல்முனை மாநகர பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜெளஸி, கல்முனை சாய்ந்தமருது வர்த்தக சங்கங்களின் பிரமுகர்கள் மாநகரசபை உத்தியோகத்தர்கள் என பலரும் இதன் போது கலந்து கொண்டிருந்தனர்.

மாநகர சபை ஆணையாளர் ஏ.ரி.எம். ராபி அவர்களின் நன்றியுரை நிகழ்வுடன் ,இறுதியாக



கல்முனைசாஹிறா தேசியக்கல்லூரி, இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயம், கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலை மாணவர்களின் அணிவகுப்புடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றது.







## வெளிநாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயக விழுமியங்களின் அடித்தளத்தில் கட்டமைக்கப்பட்ட வலுவான மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் கூட்டாண்மையை இரு நாடுகளும் உருவாக்கியுள்ளன.

வரும் ஆண்டில், இந்தோ - பசிபிக் பிராந்தியம் முழுவதும் ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பை மேம்படுத்துவதற்காக நமது நாடுகளுக்கு இடையே வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரிப்பதற்கும், பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும் எதிர்பார்த்துள்ளோம் என ரூபியோ தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்ஷங்கர் தனது எக்ஸ் தளத்தில், 'இலங்கை ஆளும்தரப்புக்கும் மக்களுக்கும் சுதந்திர தினத்தன்று மனமார்ந்த வாழ்த்துக்கள். நமது மக்களுக்கு பயனளிக்கும் வகையில் நமது பன்முகத்தன்மைகொண்ட கூட்டாண்மையை முன்னேற்றுவதற்கு உறுதிபூண்டுள்ளோம்.' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், 'இலங்கைக்கு தேசிய தின வாழ்த்துகள்! உங்கள் மாபெரும் தேசத்தின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்தைக் கொண்டாடும் வகையில் சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டதை கௌரவமாகக் கருதுகின்றேன். பிராந்திய சவால்களை எதிர்கொள்ளவும், உள்நாட்டிலும் இந்தோ பசிபிக் பிராந்தியத்திலும் செழிப்பை மேம்படுத்தவும் எங்கள் கூட்டாண்மையை ஆழப்படுத்த அமெரிக்கா எதிர்பார்க்கின்றது.' எனத் தெரிவித்துள்ளார்.

'77ஆவது சுதந்திர தின விழாவில் இலங்கை மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் வாழ்த்துக்கள். பிரான்ஸ்-இலங்கை உறவுகள் வலுவாக இருக்கும் மற்றொரு ஆண்டை நாம் எதிர்பார்க்கின்றோம்.' என இலங்கையிலுள்ள பிரான்ஸ் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் பஹீம் ஹசீஸ் தனது எக்ஸ் பதிவில், '77ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்களில் இலங்கையின் சகோதர மக்களுடன் நானும் இணைந்து கொள்கிறேன். இந்த அழகான நாட்டின் அமைதி, செழிப்பு மற்றும் முன்னேற்றத்திற்கு எனது வாழ்த்துக்கள் மற்றும் பிரார்த்தனைகள். பாகிஸ்தான் - இலங்கை நட்புறவு நீடூழி வாழ்க.' எனக் குறிப்பிட்டுள்ளார்.

பகிரப்பட்ட மதிப்புகள், புரிதல் மற்றும் பரஸ்பர நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் நமது நாடுகள் ஒரு சிறப்பு பிணைப்பைப் பகிர்ந்து கொள்கின்றன. அண்டை நாடு, பல நூற்றாண்டுகள் பழமையான நட்பு மற்றும் நல்லெண்ணத்தால் அடிக்கோடிட்டுக் காட்டப்படும் இலங்கை - மாலைத்தீவு உறவுகள் அதிகரித்த ஈடுபாடுகள் மூலம் உயரும் என்று நான் நம்புகிறேன். இலங்கை மக்களுக்கு அமைதி, செழிப்பு மற்றும் தொடர்ச்சியான வெற்றிக்காக வாழ்த்துவதாக மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி மொஹமட் முசு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் தனது வாழ்த்து செய்தியில், 'சுதந்திர தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை நமது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்பையும் ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்த ஆவலுடன் காத்திருக்கிறோம்.' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை குடியரசு மேலும் முன்னேற்றமும் செழிப்பும் பெறவேண்டுமென வாழ்த்துகிறேன் என்று சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானி தெரிவித்துள்ளார்.

இலங்கை குடியரசின் 77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சவூதி அரேபிய தூதுவர் வெளியிட்ட வாழ்த்துச்செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் மாண்புமிகு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவர்களுக்கும், கௌரவ பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய அவர்களுக்கும், இலங்கை அரசு மற்றும் அதன் நேசமிகு குடிமக்களுக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று அவர் தனது வாழ்த்துச்செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நெல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் அரிசி மாபியாவைக் கட்டுப்படுத்த முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

நேற்று முதல் ஒரு வாரத்திற்குள் உத்தரவாத விலை தீர்மானிக்கப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. ஆனால் அதில் பெரும்பகுதி விவசாயிகளின் பக்கம் உள்ளது. நான் அரசாங்கத்தில் இருப்பதால் இதைச் சொல்லவில்லை. விவசாயி மற்றும் நுகர்வோர் இருவரையும் பாதுகாக்கும் நிலைப்பாட்டை எடுத்த முதல் அரசாங்கம் தேசிய மக்கள் சக்தி கட்சி அரசாங்கமாகும். பணத்தை விடுவிப்பதற்கு ஒரு செயல்முறை உள்ளது. பணம் விடுவிக்கப்பட்டுள்ளது, இப்பொழுது நீங்கள் நெல்லை வாங்கலாம். நாளை முதலே ஆரம்பிக்க முடியும் என்றார்.

## அரிசி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்ரமசிங்க ஜனாதிபதியாக இருந்து கஷ்டமான குடும்பங்களை தெரிவுசெய்து 20 கிலோ அரிசி பகிர்ந்தளித்தார். அது அனைவருக்கும் வழங்கவில்லை. என்றாலும் நூற்றுக்கு 5வீதம் தேவையற்றவர்களுக்கும் சென்றுள்ளதை ஏற்றுக்கொள்கிறேன்.

அரிசி ஒரு மனி கூட வெளிநாடுகளில் இருந்துகொண்டுவருவதில்லை என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார். அரிசி கையிருப்பு தொடர்பில் அவருக்கு யாராவது அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ள ஆலோசனைக்கு அமையவே அவ்வாறு தெரிவித்திருப்பார். இதன் மூலம் அரிசி விலை அதிகரிக்கும் என அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிந்து கொண்டார்கள்.

வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்யாவிட்டாலும் இறக்குமதி செய்வதாக தெரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் அரிசி ஆலை உரிமையாளர்கள் சந்தைக்கு அரிசி விநியோகிப்பதை வரையறை செய்வார்கள். அரிசி விலை அதிகரிக்கும் என அவர்களுக்கு தெரியும்.

பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசி மற்றும் நெல்லை மறைத்து வைத்திருக்கிறார்கள். வரலாற்றில் இந்த முறைதான் அரிசி ஆலை உரிமையாளர்கள் பாரியளவில் லாபமீட்டி இருக்கிறார்கள் என்பதை பொறுப்புடன் தெரிவிக்கிறேன். ஏனெனில் 200 ரூபாவுக்கு மேல் அரிசி விலை அதிகரிக்க இடமில்லை.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாகவே 4 கேள்வி கோரல்களும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் குறைகாணவும் விமர்சிக்கவுமே இவர்கள் திறமையானவர்கள். ஆனால் வேலை செய்ய இவர்களிடம் திறமையானவர்கள் இருப்பதை நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

அத்துடன் இறக்குமதி செய்த அரிசிகளில் அதிகமானவை வேறு வகைகளாகும். பாஸ்மதி அரசி இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று பயறு, உழுந்து, நிலக்கடலை கொண்டுவந்துள்ளார்கள். ஒரு சில பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டன. ஆனால் அவை வெளியில் வரவில்லை.

தற்போதுள்ள நிலையில் நான் விவசாய அமைச்சராக இருந்திருந்தால், எனக்கு வீட்டில் இருந்திருக்க முடியாமல் போயிருக்கும் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன போன்றவர்கள் அறுவடை செய்யும் நெல்லை எனது வீட்டுக்கு முன்னால் எரித்திருப்பார்கள். அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு மேலும் பணம் சம்பாதித்துக்கொள்ளவே அரசாங்கம் நெல்லுக்கான உத்தரவாத விலையை தெரிவிக்காமல் இருக்கிறது. இது அரசாங்கம் அவர்களுடன் மேற்கொண்டுவரும் கொடுக்கல் வாங்களாகும் என்றார்.

## சிறிலங்காவிற்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எங்கள் தாய்நிலம் விடிவுறும் நாளே, தமிழர் எமக்கு சுதந்திர நாள்!

ஈழத் தமிழர்களாகிய நாம் மரபு வழி தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமைக்கு உரித்துடைய ஒரு தேசிய இனம் என்பதை மீண்டும் உலகுக்கு பிரகடனப்படுத்துகிறோம். வட்டுக்கோட்டைத் தீர்மானம், திம்பு கோட்பாடு, பொங்கு தமிழ் பிரகடனம் என்பவற்றின் ஊடாக வரலாற்றில் தமிழ் மக்களின் அபிலாசைகள் கூட்டாக பலமுறை வெளிப்படுத்தப்பட்ட போதிலும், ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தர அரசியல் தீர்வினை காண்பதற்காக மீண்டும் ஒரு தடவை எமது ஏகோபித்த வெளிப்படுத்தலை வலியுறுத்திக் கூறவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் நாங்கள் இங்கு திரண்டுள்ளோம்.

தமிழ், சிங்கள தனித்தனி அரசுகளைக் கொண்டிருந்த இலங்கைத் தீவு காலனித்துவ ஆட்சியாளர்களின் நிர்வாகத் தேவையின் நிமித்தம் இணைக்கப்பட்டது என்ற வரலாற்று உண்மையை முதலில் சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வரலாற்று நிகழ்வுகளை முற்றாக புறந்தள்ளி எண்ணிக்கையில் பெரும்பான்மை அடிப்படையில் முழுநாட்டினதும் அதிகாரங்கள் சிங்கள தேசத்திடம் கையளிக்கப்பட்டமை என்பது ஈழத் தமிழினம் மீது தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளுக்கே வழிகோலியது என்பதோடு, சிறிலங்காவின் மாறி மாறி வரும் அரசுகள் அனைத்துமே தமிழ் மக்களிடையே எழும் போராட்டங்கள் மற்றும் உரிமைக்கான குரல்களை இராணுவ பலம் கொண்டு நசுக்குவதிலும், சிங்கள வன்முறைக் கும்பல்களின் வெறியாட்டத்துக்கு அனுமதிப்பத்திரம் அளிப்பதிலுமே நம்பிக்கை கொண்டிருக்கிறது. அதில் தற்போதைய தேசிய மக்கள் சக்தி முலாமிட்டுள்ள தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்-பும் விதிவிலக்கல்ல!

சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனியான சுதந்திர தமிழின அரசை அமைப்பதற்கான வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு 1977ஆம் ஆண்டு மக்கள் மகத்தான ஆணையை வழங்கி தங்கள் சுதந்திர வேட்கையை வெளிப்படுத்தியிருந்ததோடு, 1985ஆம் ஆண்டு திம்புப் பேச்சுக்களில் தமிழர்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டமையும் தீர்வுக்கான வழிகளில் முன்னேற்றம் காணப்படாமையின் விளைவாகவே தமிழரிடம் ஆயுதப் போராட்டம் கருக்கொண்டது என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

தமிழர் மீதான திட்டமிட்ட இனப்படு கொலைகளை கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்களின் துணையோடு தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட, நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருக்கிற கட்டமைக்கப்பட்ட படுகொலைகள், 2009ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அதியுயர் இன அழிப்பு படுகொலைகள் உட்பட மனிதப் படுகொலைகள், நிலங்களைக் கையகப்படுத்துதல், பாலியல் வன்முறைகள், பண்பாட்டு மற்றும் பொருளாதார கட்டுமானங்களை அழித்தல் போன்ற வன்முறைகள் மூலம் தமிழ் மக்களுடைய தேசத்துக்கான தகுதிப்பாட்டை தாங்கி நிற்கும் அனைத்து விழுமியங்களும் அழித்தொழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என ஏற்றுக்கொள்ளப்படாமல், தமிழர் தேசம், சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்படாமல் தமிழ் மக்களின் இறைமை இந்த நிலத்தில் உறுதி செய்யப்படமாட்டாது. சிறிலங்காவுக்கு வழங்கப்பட்ட சுதந்திரம் என்பது தமிழ் மக்களை ஒடுக்குவதற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமே ஆகும். பெறப்பட்ட சுதந்திரத்தின் இறைமை தமிழ் மக்களுடன் பகிரப்பட்டதாகக் கொள்ள முடியாது.

தமிழ் மக்களுக்கான தீர்வு முயற்சிகள் யாவும் திம்புக் கோட்பாட்டினை அடியொற்றியே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு, தமிழ் மக்களின் அபிலாசைகளை சிறிலங்காவின் ஒற்றையாட்சி அரசியலமைப்பின் பதின்மூன்றாம் (13ஆம்) திருத்தம் மற்றும் ஏக்கிய ராஜ்ஜிய சதிக் கோட்பாடுகளினுள் தமிழர் தேசத்தின் இறைமைக்கான அரசியலை முடக்க எத்தனிக்கும் அனைத்து முயற்சிகளையும் முற்றாக நிராகரிப்பதோடு, தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக தமிழர்களை ஒரு தனித்த இறைமையுள்ள தேசமாக அவர்களின் பாரதீனப்படுத்தப்பட முடியாத சுயநிர்ணய உரிமை அங்கீகரிப்பது மட்டுமே மேலே குறிப்பிட்ட அனைத்து ஒடுக்குமுறைகளும் மீள நிகழாது இருப்பதை உறுதி செய்யும் என்பதை வலியுறுத்துகிறோம்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் பின்வரும் தமிழ் மக்களைச் சூழும் சதிக்கோட்பாடுகள் மற்றும் சமகால அடிப்படை சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டும் என்பதை குறிப்பிட்டுக்கொள்கிறோம்.

1. தமிழ் மக்களின் தீர்வு முயற்சிகளை சிறிலங்காவின் ஒற்றையாட்சி அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தினுள்ளும் ஏக்கிய ராஜ்ஜிய அரசியலமைப்பு சதிவலைக்குள்ளும் தமிழ் மக்களின் இறைமைக்கான அரசியலை முடக்குவதற்கு எத்தனிக்கும் அனைத்து முயற்சிகளும் முறியடிக்கப்பட வேண்டும்.

2. எமது உறவுகளை தேடும் உரிமை, கருத்துரிமை, பேச்சுரிமை, வளங்களை அனுபவிக்கும் உரிமை, நீதி கோரும் உரிமை என்பன பயங்கரவாத தடைச் சட்டம், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் உள்ளிட்டவற்றை முன்னரே சிறிலங்காவின் நடப்பு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னரே வாக்களித்தது போன்று இவற்றை மீளப்பெற முன்வர வேண்டும்.

3. தொல்பொருள் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், வனவள பாதுகாப்பு திணைக்களம், மகாவலி அபிவிருத்தித் திணைக்களம் என்னும் போர்வையில் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான நில அபகரிப்புத்திட்டங்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதோடு, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் உரியவர்களிடம் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. தேசிய மக்கள் சக்தியினால் தேர்தல் காலங்களில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைவாக, தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாட்டை சிதைக்கும் நோக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து சிங்கள குடியேற்றங்களும் அகற்றப்பட வேண்டும்.

5. விடுவிக்கப்படாது எஞ்சியுள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும்.

6. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான அனைத்துலக விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதுடன் அவர்களுக்கு அனைத்துலக நீதி வழங்கப்படுவதோடு குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

7. வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழ் இளையோர்கள் கூட்டாக சிந்திப்பதைத் தடுத்து உளவியல் ரீதியாக சிதறடிக்கும் நோக்கம் கொண்டு அரசபடைகளின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் விநியோகம் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

8. பிராந்திய - பண்பாட்டுப் பல்கலைக்கழகங்களாக விளங்கும் எமது யாழ்ப்பாண, கிழக்கு, வவுனியா பல்கலைக்கழகங்கள் பிராந்தியம் சார் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களை மையமாகக் கொண்டு செயற்படுவதையும் தமிழ் மாணவர்களின் கல்வி மற்றும் கல்வி சாரா செயற்பாடுகளில் அவர்களது வாய்ப்புக்களின் இருத்தலையும் உறுதி செய்ய வேண்டும்.

9. காலகாலமாக நடைபெற்றுவரும் தமிழின அழிப்புக்கு அனைத்துலக நீதி பொறிமுறை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் (ஐஊஊ), அனைத்துலக நீதிமன்றம் (ஐஊது) ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிகார நீதி வழங்கப்பட வேண்டும். அத்துடன் ஐக்கிய நாடுகள் அவையில் சிறப்பாக உருவாக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் பொறிமுறைகளும் அனுமதிக்கப்பட வேண்டும்.

10. தமிழினப் படுகொலையை நிகழ்த்தி தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து தொடர்ந்தும் உரிமைமீறல்கள், சமூகவிரோதச்செயல்களுக்கு பாதுகாப்பாக உள்ள இராணுவத்தினர் தமிழர் தாயகத்திலிருந்து வெளியேறுவதுடன், மக்களின் செயற்பாடுகளில் தலையிடுவதையும் முற்றாக நிறுத்த வேண்டும்.

இலங்கையில் நிலையான அமைதி ஏற்படுவதற்கு ஈழத் தமிழர்களின் தேசிய இன பிரச்சினையில் மரபு வழித் தாயகம், தமிழ்த் தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் எட்டப்படும் எந்தவொரு அரசியல் தீர்வும் அனைத்துலக சமூகத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டு கண்காணிக்கப்படும் பொது வாக்கெடுப்பின் மூலம் தமிழ் மக்களின் ஆணை பெறப்படவேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும்.

அத்துடன் ஈழத் தமிழர்களின் தலைவிதியை ஈழத் தமிழர்களே தீர்மானித்து, எம்மை நாமே ஆளக்கூடிய நிரந்தர தீர்வும் பொது வாக்கெடுப்பில் உள்வாங்கப்பட வேண்டும் என்பதை தமிழ் மக்கள் சார்பாக இந்த பிரகடனத்தின் ஊடாக உலகுக்கு அறிவிக்கின்றோம் என்றுள்ளது.


# பாடசாலையில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வுகள்

(கேதீஸ்)

எமது நாட்டின் 77 ஆவது சுதந்திர தினத்தையொட்டி தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலையில் சுதந்திர தின நிகழ்வுகள் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் தலைமையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இதன்போது பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் , பிரதி அதிபர் இளங்கோ, பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துக்கொண்டனர்.





# ஐஸ் போதைப் பொருளுடன் கைதான இளைஞனிடம் தீவிரமான விசாரணை

(பாறுக் ஷிஹான்)



கல்முனை விசேட அதிரடிப் படையினரால்கைதுசெய்யப்பட்ட 22 வயது இளைஞன் குறித்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக ஐஸ் போதைப்பொருளை விற்பனை செய்து வந்த நிலையில் திங்கட் கிழமை இரவு கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில்ஐஸ்போதைப்பொருளுடன் கைதானார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரை பள்ளிவாசல் வீதி அருகில் வைத்து 22 வயதுடைய சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தார்.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து ஒரு கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்ததுடன் சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக கல்முனை தலைமைய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும் இந்த கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி. சி.எஸ்.ரத்நாயக்கவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் 77ஆவது சுதந்திரதின நிகழ்வு நடந்தது

(நூருல் ஹுதா உமர்)

இலங்கையின் 77 வது சுதந்திர தின நிகழ்வு கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக்கல்விபணிப்பாளர்எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது தேசிய கொடியேற்றல், உயிர்நீத்த படைவீரர்களுக்கான மௌனப் பிரார்த்தனை, மரம் நடுகை, தேசிய தின உரை என்பன சிறப்பாக நடந்தேறின





# சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலில் சுதந்திர தின நிகழ்வுகள் அனுஷ்டிப்பு

(ஸாகிர்)





இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 77 ஆவது சுதந்திர தினம் நேற்று (செவ்வாய்க்கிழமை) சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் கொண்டாடப்பட்டது.

சாய்ந்தமருது - மாளிகைக் காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின்பொறுப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் மரைக்காயர்மார்கள் புடைசூழ தேசிய கொடி ஏற்றப்பட்டது.

சாய்ந்தமருது - மாளிகைக் காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலினால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சுதந்திர தினத்தையொட்டி பள்ளிவாசல் வளாகத்தில் மரநடுகை நிகழ்வும் இடம்பெற்றது.

சாய்ந்தமருது-மாளிகைக்காடு ஜும்ஆப்பெரியபள்ளிவாசலின் பிரதித்தலைவர் எம்.எம்.எம். இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அரசமைப்புப் பேரவை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் அபிவிருத்தி குழுத் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்வில், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி வை.எல்.ஏ. ரகூப், பொலிஸ் பரிசோதகர் யூ.எல்.எம்.முபாரக், ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளர் எம்.எம்.எம்.றபீக், பொருளாளர் ஏ.சலீம்உட்பட, பொறுப்பாளர் சபை உறுப்பினர்கள், கௌரவ மரைக்காயர்மார்கள் உட்பட அதன் நிர்வாக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு மரங்களை நட்டு வைத்தனர்.

இதன்போது சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பேஸ் இமாம் எம்.ஐ. ஆதம்பாவா ரஷாதியினால் துஆப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



# அல்மனார் சமூக நலன்புரி ஒன்றியத்தால் சம்மாந்துறையில் சுதந்திர தின நிகழ்வு

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை அல் மனார் சமூக நலன்புரி ஒன்றியத்தின் ஸ்தாபக தலைவர் கே.ஆர்.எம். றிசாட் தலைமையில் சம்மாந்துறை செந்நெல் ஸாகிறா மகா வித்தியாலயத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை வேளையில் நடைபெற்றது.

இதன் போது, மூவின மத வரவேற்புடன் சம்மாந்துறை கோட்டத்திற்கு உட்பட்ட புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவித்து கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவர் எம்.ஐ.எம். மன்சூர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.எம். ஹனீபா, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டி.பிரபாசங்கர், சம்மாந்துறை ஊடக மையத்தின் ஆலோசகர், சட்ட முதுமானி எம்.ஏ.எம். லாபீர், சம்மாந்துறை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி ஏ.டி.ஆர்.விஜேவர்தன, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சட்டத்தரணி எம்.எம்.சௌபீர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினர்களான ஏ.எம்.ஏ. அஸீஸ், ஏ.எம். தபீக், ஓய்வு பெற்ற சம்மாந்துறை வலயக்கல்வி ஆசிரிய ஆலோசகர் (சுகாதாரம் உடற்கல்வி), றிசாட் அன்ட் பிரதர்ஸ் அமைப்பின் ஆலோசகர் கே.எம்.எஸ். நஜ்ஜாஸ், முன்னாள் அதிபர் எஸ்.எல்.அபூபக்கர், சம்மாந்துறை செந்நெல் ஸாகிறா மகா வித்தியாலயத்தில் அதிபர் யூ.எல். இஸ்மாயில், அல் மனார் சமூக நலன்புரி ஒன்றியத்தின் உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கல்முனை தெற்கு தேசிய சுதந்திர தின விழா

(அப்ராஸ்)

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் 77ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வு நேற்று(செவ்வாய்க்கிழமை)இடம்பெற்றது.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஸஹ்ரா சாரப்தீன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்திய அதிகாரி அலுவலக வாளாகத்தில் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டதுடன் மர நடுகையும் இடம் பெற்றது.

கல்முனைபிரதேசசெயலாளர்ரீ.எம்.எம்.அன்சார்,பிரதம அதிதியாக கலந்து கொண்டு மர கன்றினை நாட்டினார். மேலும் இதன் போது கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரைப் பள்ளிவாசல் நிர்வாகத்தினர்கள் மற்றும் இந்து,இஸ்லாமிய மத குருமார்கள் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரிகாரியாலயபொது சுகாதார அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் இதன் போது கலந்து கொண்டனர்.

இதன் போது அங்கு இடம் பெற்ற நிகழ்வில் சுகாதாரவைத்தியஅதிகாரி ஸஹ்றாசாரப்தீன்உரையாற்றுகையில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் பணிகள் மற்றும் அவற்றை நடைமுறைப் படுத்துவதில் உள்ள



நிருவாக சபை உறுப்பினர்களான உஸ்தாத் சபா முஹம்மத் நஜாஹி,எம்.எம்.முபாரிஸ் ஆகியோர் அங்கு கலந்து கொண்டு உரையாற்றுகையில் எமது பிரதேச மக்களின் சுகாதார நலன் சார் விடயங்களில் பெரிய பள்ளிவாசல் என்ற வகையில் முழு ஒத்துழைப்புக்களையும் வழங்கும் என கருத்துத் தெரிவித்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# கிரிக்கெட் சங்க ஏற்பாட்டில் மருதமுனை சுதந்திர தினம்

(ஷினாஸ்)

மருதமுனை கிரிக்கெட் சங்கம் ஏற்பாடு செய்த 77 ஆவது சுதந்திர தின நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் சங்கத்தின் தலைவர் ஏ.மனாஸ் தலைமையில் வெகு விமரிசையாக இடம்பெற்றது.

தற்போது மைதானத்தில் மருதமுனை கிரிக்கெட் சங்கத்தால் ஏற்பாடு செய்து நடத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வு வைபவ ரீதியாக இடம் பெற்றது.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதியும் அரசியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் டாக்டர் எம்.எம்.பாஸில் கலந்துகொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வில் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சங்கத்தின் செயலாளர் எம்.ஐ. நஜிமுல் றியாஸ், பொருளாளர் எம்.எம்.சறூக், சிரேஷ்ட உதவி தலைவரும் சுற்றுப்போட்டி குழு தவிசாளருமான ஏ.எம்.றியாஜத், உதவித் தலைவரும் ஒழுக்காற்று குழு தவிசாளருமான ஏ.ஆர்.எம். உவைஸ், தொழில்நுட்ப ஊடகக் குழுவின் தவிசாளர் ஏ.எல்.எம்.ஷினாஸ், மத்தியஸ்தர்கள் குழுவின் தவிசாளர் எம்.என்.எம். நாஜித் உட்பட விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள், கிரிக்கெட் சங்கத்தின் உறுப்பினர்கள், அணிகளின் தலைவர்கள், கிரிக்கெட் வீரர்கள், அபிமானிகள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.







## காரைதீவு பிரதேச செயலகத்தில் 77 ஆவது சுதந்திரதின நிகழ்வுகள்



(நூருல் ஹுதா உமர்)

இலங்கைசனநாயகசோசலிசக் குடியரசின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் காரைதீவு பிரதேச செயலாளர் பொறியியலாளர் ஜீ. அருணன் தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் இடம் பெற்றது.

இதன் போது தேசியக் கொடி ஏற்றுதல், தேசிய கீதம் மற்றும் பிரதேச செயலாளர் உரை மற்றும் மர நடுகை என்பன இடம் பெற்றன.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.02.2025இல் வெளியிடப்பெற்றது